விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆடி 20 ஷவ்வா 3 இதழ் 171
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 4-8-1981

எம்மிடம்......
உள்ளூர், வெளியூர்

காப்பற் வகைகள் (Floor)
லொறிகளுக்கு
பொடி அடிக்கும்
(F) பிற்றிங்ஸ்........
மெழுகுசீலை வகைகள்

இன்னும் பல பொருட்கள்
நியாய விலையில் கிடைக்கும்.

H. ESMAILJEE & Co

71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

எங்களிடம் நீங்கள்
Sigma Pumps வாங்கும்போது
அதற்குரிய பைப் சாமான்களைத்தருவது
மட்டுமல்லாமல்
அதனை உங்கள் இல்லத்திலேயே
நிர்மாணிக்கவும் வசதிகள்
செய்து தருகின்றோம்.

விபரங்கட்கு:

ராம்ஸன்ஸ்
ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்

19, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 508

### ஆனைக்கோட்டை பொலிஸ் நிலைய தாக்குதல் சம்பவம்:

# பாராளுமன்றத்தில் இன்று விவாதத்துக்கு வரும்?

(கொழும்பு)

**பாராளுமன்றம் இன்று கூடும்போது ஆனைக்கோட்டைப்பொலிஸ் நிலைய தாக்குதல் சம்பவம் குறித்து விவாதிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.**

ஆனைக்கோட்டை பொலிஸ் நிலைய தாக்குதல்சம்பவம் குறித்து பொதுமக்களின் நலன்கருதும் அத்தியாவசிய பிரேரணை ஒன்றைச் சபையில் சமர்ப்பித்து அதனை விவாதிப்பதற்கான முயற்சியில் அரசதரப்பு எம்பிக்கள் முயற்சித்துவருகின்றனர் என அரசியலவட்டாரங்களில தெரிவிக்கப்பட்டது.

**கூட்டணி கலந்துகொள்ளுமா?**

இச் சம்பவம்பற்றி விவாதிக்கப்படும்பட்சத்தில் இப்போது பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவரும் தமிழர்விடுதலைக்கூட்டணி அவ்விவாதத்தில் கலந்துகொள்ளுமா என்பது பற்றி கூட்டணியின் பாராளுமன்றக்குழு இன்று காலை முடிவுசெய்யும்எனத் தெரிகிறது.

இதேவேளையில் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டுவந்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை இன்று விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படும்போது யாழ். மாவட்ட சபைத்தேர்தல் சம்பவங்கள் குறித்து விவாதிப்பதா இல்லையாஎன்பதுக்பற்றி அரசாங்கப் பாராளுமன்றக்குழு இன்று முடிவு செய்யும்.

## அம்பாறையில் அசம்பாவிதம்

[கொழும்பு]

அம்பாறையில் நேற்று இடம் பெற்ற அசம்பாவிதசம்பவங்களை அடுத்து பதில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வெரப்பிட்டியாவும் மற்றும் சில உயர் அதிகாரிகளும் அம்பாறைக்கு விரைந்துள்ளனர்.

கடந்தவார இறுதியில் மட்டக்களப்பிலும் அம்பாறையிலும்

[6ம் பக்கம் பார்க்க]

## சு. கவில் சர்வாதிகாரம் தலைதூக்கியுள்ளது

### பத்திரிகையாளரிடம் மைத்திரி

[கொழும்பு]

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கடந்த 1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தோல்வி அடைவதற்குக் காரணமாக இருந்தவர்களின் கைகளில் கட்சித்தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அகப்பட்டுள்ளார். இது மிகவும் வருத்தத்துக்குரியதாகும்.

சுதந்திரக்கட்சியில் தற்போது சர்வாதிகாரம் தலைதூக்கியுள்ளது. கட்சியையும் அதன் ஆதரவாளர்களையும்ர திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நடாற்றில் விட்டுள்ளார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா நேற்று கொழும்பில் உள்ள தமது இல்லத்தில் நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில தெரிவித்தார்.

திரு. சேனநாயக்கா மேலும் தெரிவித்ததாவது:

ஹொரகொல்லையில நேற்று முன்தினம் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையில நடைபெற்ற கூட்டத்திற்கு நாடு முழுவதிலும் உள்ள 22,800 கட்சிகிளைகளில் சிலவற்றுக்கே அழைப்பு அனுப்பப்பட்டது. 4 ஆயிரம் பேரே அக்கூட்டத்தில் பங்குபற்றினர். இவர்களில் சிலர் கட்சி அங்கத்தவர்கள்கூட இல்லை.

கட்சித்தலைமைப் பீடத்தைச் சேர்ந்த திரு அனுரா பண்டாரநாயக்காவும் மற்றும் 13 பேரும் அக்கூட்டத்தை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.

தோல்வியையும் அபிப்பிராய பேதத்தையும் திருமதி பண்டாரநாயக்கா விரும்பமாட்டார். [இ]

## மே. ஜெர்மனியில் அன்னை திரேசா இலங்கையர்களை சந்தித்தார்

பொன், ஆக்கஸ்ட் 3

மேற்கு ஜெர்மனியில் அரசியல் புகலிடம் மறுக்கப்பட்டிருக்கும் இலங்கையர்களை அன்னை திரேஸா கடந்த வாரம் சந்தித்துப் பேசினார். மேற்கு பெர்லினில் உள்ள செஞ்சிலுவைச் சங்க முகாம் ஒன்றில் இச்சந்திப்பு நடைபெற்றது.

அகதிகளில் பெரும்பாலானவர்கள் இலங்கையிலிருந்து நேராகக்கிழக்கு பெர்லினுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து மேற்கு பெர்லினுக்குள் பிரவேசித்தவர்களாவர்.

யாழ். நகர மக்களுக்கு ஓர் நற்செய்தி...
உல்லாச சவாரிக்கு உகந்த.........
ஹீரோ,
எவொன் — சைக்கிள்கள்
வெஸ்பா — ஸ்கூட்டர்
சுஸுக்கி — மோட்டார் சைக்கிள்கள்
மற்றும்
சகலவித உதிரிப்பாகங்கள் அனைத்திற்கும்

சி. சின்னத்துரை
அன் கொம்பனி

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7357

நல்லூர் உற்சவம்:

## வழமைபோல் பொலிசார் கடமையாற்றுவர்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்துக்கு வழமைபோல் பொலிசார் கடமையாற்றவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டசபைத் தலைவரின் பணியக மனையில் உற்சவ பாதுகாப்புச்சேவை சம்பந்தமாக நேற்று ஆராயப்பட்டபோதே பொலிசார் பாதுகாப்பு வழங்க சம்மதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டம் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. எஸ். நடராசா தலைமையில் மாவட்டச் செயலாளரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். தர்மபாலன், நிர்வாக உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம், யாழ். மாநகர சுகாதார அத்தியட்சகர் டாக்டர் எம். வேதாரணியம், சுகாதாரப் பரிசோதகர் திரு. எம். ஜெகநாதன் ஆகியோர் கூடிஆராய்ந்தனர்.

பொலிஸ்பகுதியிலிருந்து எவரும் சமுகமளிக்கவில்லை.

ஆலயத்தில் சேவையாற்றும் தொண்டர்கள் பொலிசாருக்கு பூரண ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும் பொலிசார் எல்லா நேரமும் கரும மாற்ற முடியாத நிலையிலிருப்பதால் தொண்டர்சள் ஒழுங்காக கடமையாற்ற வேண்டும் என்றும் மாவட்டசபைத்தலைவர் கேட்டுக்கொண்டார் [மா]

## பொலிஸார்இல்லாத வேளையில் . . .

(யாழ்ப்பாணம்]

நல்லூர்க்கந்தசுவாமி கோவில வருடாந்த உற்சவத்தின்போது பொலிஸார் கடமையாற்றுத பட்சத்தில் சாரணர்களும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையைச் சேர்ந்த 50 தொண்டர்களும் தினமும் பொலிஸாரின் கடமைகளைச் செய்வார்கள்.

கோவில் வீதியில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் ஒன்று நிறுவப்பட்டு கிராமசேவை அலுவலர்களும் பொலிஸாரின் கடமைகளில் ஈடுபடுவார்கள்.

யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் மாநகரசபைக் காரியாலயத்தில் நேற்றுக்காலை நடந்த நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் தொடர்பான மாநாட்டில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

இம்மகாநாட்டில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. சபாபதிப்பிள்ளை, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கிட்ணர், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முகாந்தரம் ஈ. பீ. இராசையா, யாழ். மாவட்டத்தில் சாரணர்களைக் கொண்ட கல்லூரிஅதிபர்கள், ஆணையாளர் திரு. கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டனர்,

கோவிலுக்கு வரும் 5 பாதைகளிலும் தினமும் காலை 4 மணி முதல் 10 மணி வரையும், பிற்பகல் 4 மணி முதல் 10 மணி வரையும் ஒவ்வொரு பாதையிலும் 4 சாரணர் வீதம் கடமையாற்றுவார்கள்.

6ம் பச்கம் பாரக்க

அரிய சந்தர்ப்பம்

றேடியோ - டெலிவிசன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சிகள், மற்றும் பி. எம். ஜி. [றேடியோ ஆபிசர்] பயிற்சி ஆரம்பம் 8-8-81. அனைவரும் சேரலாம். நேரில் வரவும்.

நாசனல் அக்கடமி
மொம்சார் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 0510

### மணிவாக்கு

சிந்தனை, சொல், செயல் இம்மூன்றும் அன்பை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தால் வாழ்வு முழுமையானதாகவே இருக்கும்.

— சர்வோதய சிந்தனைகள்

# நமது நோக்கு

## உலகை மூடும் உலைமூடி

அடிக்கடி கண்ணுல் காண்பதெல்லாம் உண்மை; அடிக்கடி காதால் கேட்பதெல்லாம் உண்மை. இந்த அடிப்படை உண்மையிலேயே விளம்பரங்கள் வியாபாரத்தில் முக்கிய இடம் பெறுகின்றன.

வர்த்தகம், வியாபாரம் மட்டுமல்ல; அரசியல் பிரசாரமே இந்த உண்மையில் பெரிதும் தங்கியிருக்கிறது. அரசாங்க வானொலியும், அரசை ஆதரிக்கும் பத்திரிகைகளும் அரசின் இரு வல்வமை பெற்ற புயங்கள். நுணுகிப் பகுத்தறியும் ஆற்றலில்லாத நேயர்களும், மனக்கண் கொண்டு வரிகளுக்கிடையே ஒழித்திருக்கும் உண்மையைப் புரியமுடியாத வாசகர்களும் தினசரி ஏமாற்றமடையும் பிறவிகளே!

நல்ல உதாரணங்கள்; இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பிரிட்டன் 'டங்கேர்க்' [Dunkirk] என்னும் இடத்தில் ஹிட்லரின் பயங்கரப் படையால் தாக்குண்டு பெருந் தோல்வியடைந்து; பல்லாயிரக்கணக்கான பிரிட்டிஷ் படை ஜெர்மன் கையில் அகப்பட்ட மிக அற்புதமான வழியில் இன்னும் ஒரு பகுதி— பல்லாயிரக்கணக்கான படையினர் கடல் கடந்து இங்கிலாந்து ஓடித் தப்பினர்.

இதனை இன்று உலகு நன்கறிந்ததே. ''டங்கேர்க்கில் எங்கள் படை வெற்றிகரமாகப் பின்வாங்கியது'' என்ற தலைப்பில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் வெளியிட்டன.

பிரிட்டிஷ் வானொலி இதற்கு எள்ளளவும் குறைந்ததல்ல: பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் 1940ல் மிக நெருக்கடியான காலத்தில் ''பிரிட்டன் கடைசி மனிதன் உயிரோடிருக்கும் வரைக்கும் போர் தொடர்ந்து புரியும் ஆண்மையுடையது.'' அடிக்கடி வானொலியில் அவர் இவ்வாறு கர்ச்சிப்பது வழக்கம். இது பிரிட்டிஷ் மக்களை உற்சாகப்படுத்தியது உண்மை.

இதற்குப் பதிலளித்த பேர்லின் வானொலி சொல்லியது; 'பிரிட்டன் கடைசி பிரெஞ்சுக்காரன் உயிரோடிருக்கும் வரைக்கும்தான் போர் புரியும்.'' இது பலருக்குக் கிடையாத வானொலிச் செய்தி.

இதனை நாம் விளக்க முயன்ற காரணம் வாசகர்களுக்கு நன்கு புரியும்.

இலங்கை வானொலியிலும் அரசு சார்புப் பத்திரிகைகளிலும் கேட்கப்படுவதும், காணப்படுவதும் ஒரே ஒரு பழைய பல்லவி. இந்த நாட்டில் அரசு எல்லா இனங்களையும் சமத்துவமாக நடத்துகிறது. தமிழர்களை அரசு துன்புறுத்துவதென்ற செய்தியை விஷமிகள் சிலர் உலகின் பல பாகங்களிலும் பரப்பிவருகின்றனர். இப்படி அடிக்கடி சொல்லப்படுகிறது.

வடபகுதி மக்களாவது இகனை எவ்வாறு நம்புவது? கண்ணுக்கு நேரே யாழ். நூல்நிலையம் எரிந்து கிடக்கிறது. தமிழ் மக்களுக்கு மொழி, கலாசார, அரசியல், சமூகவியல் அடிப்படையில் சமத்துவ நோக்கின் செய்திகளைப் பல்லாண்டுகளாக வழங்கிவந்த ஒரே ஒரு மாகாணத் தினசரி ஆலயம் நெருப்புக்கிரையாய்விட்டது. அரசியல்கட்சித் தலைமைக் காரியாலயம் தரைமட்டமாய்க் கிடக்கின்றது. யாழ்ப்பாணத்தின் பண்டைய வியாபாரநிலையமாகிய ''பெரிய கடை'' யின் ஒரு பகுதி அழிந்த ஆயிரங்கால் மண்டபம் போல் காட்சியளிக்கிறது.

புத்தகக் கடைகள், சிறு கடைகள், பெரும் வியாபாரத்தலங்கள் இன்னொரு புறம்.

துப்பாக்கிக்கு இலக்கான இளைஞர்கள், ஏழைகள், வயோதிபர்கள் இதன் விளைவால் அனாதைகளான பலர். இவற்றை இலங்கை வானொலியில் குறிப்பிடுவது அரசியல் நிர்வாக விவேகமாகாதுதான்; ஆனுல் தமிழ் மக்களுக்கு எவ்வித பாகுபாடும், அநீதியும் இந்த அரசு இழைக்கவில்லை என்று சொல்லுவதானுல் அது அரசியல் துணிவா? இதுவரையும் எவ்வித நிவாரணமும் கிடைக்காத பரிதாப நிலை.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலத்தினசரிகள் அனைத்தும் அரசைக் காப்பாற்றும்பொருட்டோ அல்லது தமிழ்மக்களில் —அல்லது யாழ். மக்களில் கொண்ட வெறுப்போ— தெரியவில்லை— இங்கு நடைபெறும் நன்மைகள் ஒன்றையும் பிரபலமாகப் பிரசுரிப்பதில்லை, அரசு ஒரு சிறு சலுகை அளித்துவிட்டால் அது முதற் பக்கச் செய்தி—இங்கு நடைபெறும் கொலை, கொள்ளை என்ருல் அவர்களுக்குத் தேனும் பாலும். வேறு பகுதிகளில் இவை நடைபெறுவதில்லைப் போலும்.

வானொலி கேட்கும் நேயர்கள், பத்திரிகை படிக்கும் வாசகர்கள் பலர் அறிவு முதிர்ச்சியுடையவர்கள் என்பதை நாம் மறந்துவிடலாகாது.

இன்று உலகத்தை உலைமுடியால் மூடமுடியாதென்பதை இந்த வெகுஜனத்தொடர்புச் சாதனங்கள், அவற்றை இயக்கும் கர்த்தாக்கள் நன்கு அறியவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, அதற்கு முன்னரும் நாட்டில் நடைபெற்ற கலவரங்கள்— 1958ல், 1966ல் 1977ல், 1979ல்— உலகு அறிந்த விடயம்.

இன்று யாழ்ப்பாண மக்களின் பாதுகாப்பற்ற நிலை, தமிழ்மக்களின் இரண்டாந்தரப் பிரஜைகளின் நிலை என்பதை மூடிமறைக்க இந்த அற்புத உலகம் எந்த ஒரு உலை மூடியையும் கண்டுபிடிக்கமாட்டாது.

சர்வதேச அரசியல், சமுதாய, மனிதாபிமானக் குழுக்கள் உலகின் எந்தமூலையையும் மூடிவிடா,

எனவே துப்பாக்கியின் தீவிரம் ஓய்ந்துவிட, உண்மை, நீதி, சுதந்திரம் தலை தூக்கும்.

---

### இனங்களுக்கிடையில் வேறுபாடுகள்

# நன்மையா தீமையா நாமே தீர்மானிக்க வேண்டும்

## பிரபல பத்திரிகையாளரின் கருத்து

இலங்கைத் தமிழர்களின் வரலாறுபற்றி புதுப்புது ஆராய்ச்சிகளைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள்.

வரலாற்றாசிரியர்கள் இனித் தமது ஆராய்ச்சிகளுக்கு கஷ்டப்படத் தேவையில்லை!

இலங்கையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதெப்படி என்ற நிலைமாறி பொறுப்புள்ள சில அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் எதையெதையோவெல்லாம் பேசுகின்றார்கள்

இருபத்தைந்து வருடங்களுக்குமுன் ஆட்சியைக்கைப்பற்றுவதற்காக மக்களின் உணர்ச்சியைத் தூண்டித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காகச் சிலர் பேசிய பேச்சுக்களைவிட மோசமாகச் சமீப நாட்களாக பொறுப்புவாய்ந்தவர்கள் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்

இவர்களுடைய பேச்சுக்களை அவதானிக்கும்போது விரைவில் ஒரு பொதுத்தேர்தல் வரப்போகின்றதா என்ற கேள்வி எழுவதும் நியாயமே

### திசைதிருப்புவது ராஜதந்திரம்

ஒரு நாட்டில் பொருளாதார நெருக்கடியும் சிக்கலும் ஏற்படும போது மக்களைத் திசை திருப்பிவிடுவது ஒரு இராஜதந்திரம்.

உள்நாட்டில் பொருளாதாரம் மற்றும் அரசியல் சமூகப் பிரச்னைகள் தோன்றும்போது பல நாடுகள் எல்லைப்பிரச்னையைக் கிளப்பி மக்களைத்திசை திருப்பிவிடுவதுண்டு.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் அதிர்ஷ்டவசமாகவோ துரதிர்ஷ்டவசமாகவோ எல்லைப் பிரச்னைகள் இல்லை.

ஆனுல் இனப்பிரச்னையை எதற்கும் எச்சந்தர்ப்பத்திலும் எப்படியும் பயன்படுத்தலாம்.

என்ருலும் 1956, 1958, 1961, 1965, 1977ம் ஆண்டுகளில் போலல்லாது இம்முறை இனப்பிரச்னையைச் சிலர் தூண்டி பெரும் பிரயத்தனங்கள் செய்தபோதிலும் சாதாரண பொதுமக்கள் மத்தியில் அது அதிகம் எடுபடவில்லையென்றே சொல்லவேண்டும்.

இப்பொழுது ஆட்சிபீடத்திலுள்ள ஐக்கிய தேசியக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கையில் இனப்பிரச்னைக்கு சுமுகமான, நிரந்தரத் தீர்வு காண்பதற்கு சகல அரசியல் கட்சிகளையும் கொண்ட வட்டமேசை மகாநாடு கூட்டி நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தது.

இன்றுள்ள நிலைமையில் இத்தகையதொரு வட்டமேஜை மாநாடு கூடுவதோ இந்த மாநாட்டைக் கூட்டி ஆராய்வதால் உரிய பயனோ கிடைக்குமென்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இச்சமயத்தில் இலங்கையின் பிரபல பத்திரிகையாளர்களில் ஒருவரும் ''டைம்ஸ் ஒப் இந்தியா'' பத்திரிகையின் இலங்கைநிருபருமான திரு காமினி நவரத்தினுவை நான் சமீபத்தில் சந்தித்தபோது அவர் தெரிவித்த சில கருத்துக்களை இங்கு தருவது உபயோகமாக இருக்கலாமெனக் கருதுகிறேன்

இலங்கையில் , இனங்களுக்கிடையிலுள்ள வேறுபாடுகள் நன்மையாகவும் இருக்கலாம் தீமையாகவும் இருக்கலாம் என்று கூறும் காமினி நன்மையா தீமையா என்பதை நாமே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்கிருர்.

### ஒவ்வொருவரும் பாதிப்படைவர்

''நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது பேச்சு, செயல் நடவடிக்கையின் மூலம் நல்ல முடிவுக்கு வழிவகுக்கலாம் மோசமான விளைவுக்கும் வழி காட்டலாம் இனங்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுச் சீரழிவதை சுயபுத்தியுள்ள எவருமே விரும்பமாட்டார். ஏனெனில் நாம் ஒவ்வொருவருமே சிறிய அளவிலோ பெரிய அளவிலோ பாதிப்புக்குள்ளாவோமென்பது உண்மை''

கே- அப்படியானுல் இனங்களுக்கிடையில் சௌஜன்யத்தை ஏற்படுத்துவதற்கு என்ன வழி?

காமினி-

### எஸ். எம். ஜீ.

முதலாவதாக எங்களில் கனிசமான அளவிலானேர் எங்கள் காதுக்கெட்டும் ஒவ்வொரு வதந்தியையும் நாங்கள் நம்ப மறுத்தால், சிறுசந்தர்ப்பத்திலேயே எதையும் நம்பி வதந்திகளைப் பெரிய அளவில் பரப்பும் கும்பலுக்குச் சந்தர்ப்பமில்லாமல் செய்தவர்களாவோம்.

இரண்டாவதாக, முடிவில் பொதுவாக உண்மையில்லையென்ற முடிவுக்குவரும் வதந்திகளைக்கொண்டு நாம் எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருக்கவேண்டும்.

உதாரணத்துக்கு வேட்டைக்குச்சென்று திரும்பியவனின் கதையை ஞாபகப் படுத்திக் கொள்வோம்.

வேடன் ஒருவன் காட்டுக்கு வேட்டையாடச்சென்று விட்டு வீட்டுக்குத் திரும்பியபோது அவனது பிரியமான நாய் வாயில் இரத்தம் ஒழுகியபடி வாசலில் நின்றது. வீட்டுக்குள் கிடந்ததனது குழந்தையை நாய்கடித்துக்குதறி விட்டதாகக் கருதிய வேடன் தனது கையிலிருந்த கோடரியால் நாயை ஒரேவெட்டாக வெட்டிக் கொன்றுவிட்டான். இதன் பின் உள்ளே சென்ற அவன் குழந்தைசுகமாகத் தூங்கிக் கொண்டிருப்பதையும் வீட்டின் ஒரு மூலையில் நாகபாம்பொன்று இரத்தத்தில் துண்டாடப்பட்டுக் கிடப்பதையும் கண்டான்.

எங்களைப் பொறுத்தவரையில் ''நாகம்'' என்பது எமது விருத்திக்குறைவு இதுதான் எங்கள் எல்லோரையும் நஞ்சூட்டுவதற்கு அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இதுதான் எங்கள் எல்லோருக்கும் பொது எதிரி. எங்கள் பொது எதிரியை நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்க்கப்போகிருமா இல்லையா? அதைத் தீர்மானிப்பதும் விளைவுகளை அனுபவிப்பதும் நாங்கள்தான்

கொஞ்சம் விபரமாகச் சொல்லப்போனுல் இலங்கையர்களாகிய எங்கள் மத்தியில் ஒரு பகுதியினர் தங்களுக்குக் குறைகள் இருப்பதாக நம்புகிருர்கள்; அப்படிச் சொல்லுகின்ருர்கள்.

ஆனுல் இந்தக் குறைகள் கற்பனையானவை என்றும், மிகைப்படுத்தப்படுபவை என்றும் எம்மில் பலரும் கருதுகிறோம். அப்படியே சொல்லியும் கொள்கிறோம்.

### கண்டுபிடிப்பதுதான் விவேகம்

ஒரு குழந்தை அழுகிறது. விவேகமுள்ள தாயார் அழுகின்ற அந்தக் குழந்தைக்கு அடிபோட்டு வாயை மூடு என்று சொல்லமாட்டாள், மாருக அந்தப் பிள்ளைக்கு என்ன நேர்ந்தது என ஆராய முற்படுவார். அநேகமாக அதற்கு வயிற்றுவலி ஏற்பட்டிருக்கலாம். அவள் ஏதோ மருந்தைக் கொடுக்கிருள். குழந்தையின் அழுகையும் நின்றுவிடுகிறது.

இதேபோல்தான் மக்களில் ஒருபகுதியினர் குறைகளிருப்பதாகக் கூறிக் கோரிக்கைகளை விடும்போது ஏன் இப்படி இவர்கள் சொல்லுகிருர்கள்; ஏன் இப்படிச் செய்கிருர்கள்களென்பதைக் கண்டுபிடிப்பதுதான் விவேகமேதவிர அவர்களை அடக்க முற்படுவதில்ல!

மக்களில் ஒருபகுதியினர் கூறும் உண்மையான அல்லது கற்பனையான குறைகளுட்பட எல்லாவற்றுக்கும் அரசியல் வாதிகளையே குற்றம் சொல்லுவது எங்களில் புலருக்கும் பழக்கமாகிவிட்டது.

ஒவ்வொரு சந்தர்ப்பசூழ்நிலையையும் தமக்குச் சாதகமாக அரசியல் வாதிகள் பயன்படுத்துவது உண்மைதான். ஆனுல் ஒரு சூழ்நிலையை அரசியல் வாதிகள உருவாக்குவது வெகுகுறைவு.

ஒரு சூழ்நிலை இருக்கும்போது அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலையால் பாதிக்கப்பட்டவர்கள் என்ன நிலையிலுள்ளனர் என்பதையே அரசியல்வாதிகள் பிரதிபலிக்கின்றனர்.

ஒரு ஜனநாயக அமைப்பில் அரசியல் வாதிகள்தான் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்.

### சந்தர்ப்பத்தை சிறிமா தவறவிட்டார்.

ஒரு விஷயத்தைக் குறிப்பாகவும் தெளிவாகவும் சொல்ல வேண்டும்.

எங்கள் பாரளுமன்ற வரலாற்றிலே 1970-ம் ஆண்டில் முதல் தடவையாக மூன்றிலிரண்டு பெரும் பான்மைப் பலத்துடன் முன்னுள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா ஆட்சி பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட சமயம் தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்குக் கிடைத்த அருமையான சந்தர்ப்பத்தை அவர் தவறவிட்டு விட்டார். தன்னுடைய ஆட்சிக்காலத்தின் ஆரம்ப கட்டத்தில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான எந்த திட்டத்தையும் அவர் மனதிலுள்ளபடி பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவுடன் அவர் நிறைவேற்றியிருக்கமுடியும்.

இது மட்டுமல்ல இரண்டு பெரும் சிங்களக் கட்சிகளுடனும் தமிழ்த் தலைவர்கள் தங்கள் ஆதரவைக் கொடுத்து அதற்குப் பதிலாக ''சலுகைகள்'' பெறுவதற்குப் பேரம் பேச வேண்டிய அவசியமில்லாமல் ஆளும் கட்சியுடன் நேரடியாகவே எதையும் செய்துகொள்ளவேண்டிய சந்தர்ப்பத்தையும் முதல் தடவையாக ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

''மற்றவர்களால் தவருக வழிநடத்தப் படுகிருர்கள் என்று பல்வேறு இயக்கத்தினரையும் தனிப்பட்டவர்களையும் பலதடவைகளிலும் குற்றம்சாட்டிய திருமதி பண்டாரநாயக்கா சமது ஆலோசகர்களினுல் தமிழரின் பிரச்னைகளை அணுகுவதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை. ஒதுக்கிவிட்டு செல்வாக்கிழந்த தமிழ் அரசியல்வாதிகள் மூலம் முயற்சி செய்ததன் விளைவாகத்தாமே தவருக வழி

[6-ம் பக்கம் பார்க்க]

## சதிப்புரட்சிக்குப் பின்

# கம்பியா ஜனாதிபதி ஜவாரு நாடு திரும்பினர்

சேனகல் ஆக. 3. கம்பியாவில் இடம்பெற்ற சதிப்புரட்சிக்குப் பின்னர் ஜனாதிபதி திரு. டாவ்டா ஜவாரு நாடு திரும்பியுள்ளதாக சேனகல் நாட்டு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கம்பியாவில் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய கிளர்ச்சிவாதிகள் அங்கிருந்து வெளியேறவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி திரு டாவ்டா ஜவாரு தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று கிளர்ச்சிவாதிகள் கேட்டுள்ளனர். அவர் பேச்சுவார்த்தை நடத்தத்தவறினால் தாம் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருப்பவர்களைக் கொல்லப்போவதாக கிளர்ச்சிவாதிகள் தெரிவித்துள்ளனர்.

கம்பியா ஜனாதிபதி திரு ஜவாரு லண்டனில் இடம்பெற்ற இளவரசர் சால்ஸின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளச் சென்றபோது கம்பியாவில் திடீர் சதிப்புரட்சியின் மூலம் கிளர்ச்சிக்காரர்கள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தது தெரிந்ததே. (வெ)

## ஊர்வலங்களுக்குத் தடை

சென்னை ஆக. 3

சென்னை நகரில் ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு நேற்று முதல் தமிழ்நாடு அரசினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இத்தடை உத்தரவு பதினைந்து நாட்களுக்கு அமுலிலிருக்குமென தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது (வெ)

## வீதியில்கிடந்த வயோதிபருக்கு உதவப்போன பரோபகாரிக்கு

# ரூ. 350 நட்டம்

(உடுப்பிட்டி)

வீதியில் நோயினால் அவதிப்பட்டுக்கொண்டு தெருவோரத்தில் கிடந்த இனந்தெரியாத வயோதிபர் ஒருவருக்கு உதவ முயன்ற இரக்கசிந்தை கொண்ட ஒருவர் கஷ்ட அனுபவங்களுக்குள்ளாக நேரிட்டது.

உடுப்பிட்டிக் கிராமசபைக்கு முன்னாலுள்ள பேக்கரி ஒன்றின் உரிமையாளரான கே. சிவகுருநாதன் என்பவருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

வீதியில் கிடந்த வயோதிபரை அவர் காரொன்றை வாடகைக்குப் பிடித்து வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றபோது ஆஸ்பத்திரியில் அந்நோயாளியை ஏற்க மறுத்துப் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனராம். பொலிசார் ஏற்கும்படி சொல்லியும் நோயாளி ஆஸ்பத்திரியில் ஏற்கப்படவில்லையாம்.

பின்னர் அந்நோயாளியைக் கரவெட்டி உதவி அரசாங்க அதிபரிடம் கொண்டு சென்றாராம். உடனே கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் அந்த நோயாளியை அனுமதிக்குமாறு மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி அதிகாரிகளுக்கு கடிதம் கொடுத்துவிட்டார். இதனைத் தொடர்ந்து இனந்தெரியாத அந்த நோயாளி வயோதிபர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதனால் அவ்வயோதிபரைக் கொண்டு சே. சிவகுருநாதன் ஆறுமணித்தியாலத்திற்கு மேலாக அலைந்தது டன் கார் வாடகையாக 350 ரூபாவையும் செலவிட வேண்டிநேரிட்டதாம்.

## ஆலயச்சொத்தை பாதுகாக்கச்சட்டம்

சென்னை ஆக 3

ஆலயச் சொத்துக்களை பாதுகாக்க தமிழ்நாடு அரசு சட்டமொன்றைக் கொண்டுவருவுள்ளதாக இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் தெரிவித்தார். [வெ]

## மின்திட்டம் பூர்த்தி

(புலோலி)

இரண்டரை லட்சம் ரூபா செலவிலான வராத்துப்பளை, சாந்தாதோட்டம் கிராமிய மின் விநியோகத் திட்ட வேலைகளை இலங்கை மின்சாரசபை துரிதமாக மேற்கொண்டதைத் தொடர்ந்து இம்மின் விநியோகத்திட்ட வேலைகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

## 'யுனிசெவ்' நிறுவனத்தின் அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

சுதுமலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு 'யூனிசெவ்' நிறுவனம் 36 புதிய கதிரைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது

## வழிபாடு

[புலோலி]

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் குருபூர்மணிமாதனம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வதிரிஸ்ரீபரமானந்தா ஆச்சிரம சுவாமிகள் சுவாமி ஸ்ரீபரமானந்தஜீ சேவாச்சிரம பிரார்த்தனை மண்டபத்தில் பூசை வழிபாடுகள் நடத்தினார்.

## தொழிற்சங்க - அரசாங்க பேச்சுவார்த்தை

வார்சோ ஆக 3

நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து போலந்தின் சுதந்திர தொழிற்சங்கம் அந்நாட்டின் அரசாங்கத்துடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

போலந்தில் தற்போது உணவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

## சதாத் - கரிங்டன் பேச்சுவார்த்தை

லண்டன் ஆக 3

மத்தியகிழக்கு பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய பொருளாதார சமூகம் எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து லண்டனிற்கு விஜயம் செய்துள்ள எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு கரிங்டன் பிரபுவுடன் பேச்சுவார்த்தைநடத்தினார். [வெ]

## எழுதுமட்டுவாள் தீவைப்பு சம்பவம்;

# சந்தேகநபர் ஒன்பது பேர் 5-ம்தேதிவரை ரிமாண்டில்!

[சாவகச்சேரி]

எழுதுமட்டுவாளில் வீடுகளுக்கு தீ வைப்புச் சம்பவம் தொடர்பாக 9 சந்தேகநபர்கள், கைது செய்யப்பட்டு சாவகச்சேரி நீதவான் திரு. சி. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாகக்கூட்டம் கூடி அத்துமீறிப் பிரவேசித்து வீடுகளுக்கு தீ வைத்து பெச ரூபாவுக்குமேல் நட்டம் விளைவித்ததாக சந்தேகநபர்களான வீரபத்திர கிருஷ்ணகோபால், கந்தையா பலலிங்கம் டவுண் சபாரத்தினம் யோகநாதன், இராசையா நவரத்தினம், இராசையா பாலசசிகரன், கந்தையா பாலசிங்கம், மு. ஜெயம்; செ. சனலிங்கம், ச. கைலநாதன் ஆகிய ஒன்பது பேரை சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப்இன்ஸ்பெக்டர் சார்ஜன் செ. துரைராசா கோர்ட்டில் ஆஜர்செய்தார்.

நீதிபதி இம்மாதம் 5ந் திகதிவரை எதிரிகளை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.


எதிரிகள் சார்பில் சட்டத்தரணி திரு. இ. பாலகிருஷ்ணன் ஆஜரானார். (வ)

## காருடன் கைதான 5 வாலிபர்கள் விசாரணையின் பின் விடுதலை!

(புலோலி)

ஊறணி ஆஸ்பத்திரிக்கு முன்னால் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஐந்து வாலிபர்கள் வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் பிரயாணம் செய்ததாகக் கருதப்பட்ட காரொன்றும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சே. உடுவம் பொல, இன்ஸ்பெக்டர் ஏ. யோகராசா ஆகியோருடன் இன்ஸ்பெக்டர் பொலிஸ் கோஷ்டி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இந்த ஐந்து வாலிபர்களைக் கைதுசெய்த பொலிசார், காருடன் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். விசாரணையின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.



### ஆனைக்கோட்டை பொலிஸ்நிலையத் தாக்குதல்:

# சிறந்த பயிற்சிபெற்றவர்களே தாக்குதலை நடத்தியுள்ளனர்!

## பாதுகாப்பு அமைச்சு நம்பிக்கை

(கொழும்பு)

ஆனைக்கோட்டைப்பொலிஸ் நிலைய சம்பவத்தினையும் அது மேற்கொள்ளப்பட்ட பாணியையும் அவதானிக்குமிடத்து இத்தகைய நிகழ்ச்சி சிறந்த பயிற்சி பெற்ற ஆங்கிலம் பேசத் தெரிந்த இளைஞர்களாலேயே மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு கருதுகின்றது.

பாதுகாப்பு வட்டார விசாரணைகளின் படி இத்தகைய பயங்கரவாதிகள் இருபெரும் பயங்கரவாத இயக்கங்களான 'புலி' இயக்கத்துடனும் 'கழுகு' இடக்கத்துடனும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கலாம் எனவும்கருதப்படுகின்றது.

பொலிஸ் நிலையத்தைத் தாக்கப் புறப்படுமுன்னர் மினிபஸ் சாரதியைக் கட்டிப்போட்டு, மினிபஸ்ஸைக்கடத்திச் சென்றமை, வெகுசாமர்த்தியமாகப் பொலிஸ் நிலையத்திற்கு வெளியே யூகமாகத் தமது ஆட்களை நிலை கொள்ளச் செய்த விதங்கள் ஆகியவற்றை அலசி நோக்குகையில் இத் தாக்குதல் பற்றிய ஒத்திகையொன்றினை முன்பே பயங்கரவாதிகள் மேற்கொண்டிருப்பதாகவும் ஊகிக்கப்படுகிறது.

பயங்கரவாத நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாடுகளில் பயிற்சிபெற்றதோடல்லாமல், யாழ்ப்பாணப் பகுதிக்கு வெளியே இருப்பதாகவும், இவர்களது ஆயுதக் களஞ்சியம் இருக்குமிடம் இவ்வியக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையோருக்கே தெரியுமெனவும் நம்பப்படுகிறது.

இத்தகைய பயங்கரவாதிகளைத் தேடி இராணுவ ரீதியிலான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதுடன் அவசரகால நிலைமையினை மீண்டும்பிரகடனப்படுத்துவது பற்றி பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாகவும் அறியப்படுகின்றது.

---

## நன்மையா . . .

[-3ம் பக்கத் தொடர்ச்சி]

நடத்தப்பட்டார். இந்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

இதன் முடிவுதான் 1972-ம் ஆண்டில் புதிய அரசியலமைப்புப் பிரகடனப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் நிரந்தரமான அக்கறையில்லாதவர்களும் தமிழ் மக்களுடன் தொடர்பில்லாதவர்களுமான செல்வாக்கிழந்த இந்த தமிழ் அரசியல் வாதிகளின் தூண்டுதலால், பொதுஜனப் பாதுகாப்புக்கு ஆபத்தானவர்கள் என்று காரணம் காட்டி நாற்பத்திரெண்டு தமிழ் இளைஞர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டதுடன் இவர்களில் சிலர் ஐந்து வருடங்களுக்கும்கூட எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாமல் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீது எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தமுடியாமலிருந்தது, ஏனெனில் அவர்கள் தங்களுக்குரிய சட்டரீதியான அரசியல் நடவடிக்கைகளில் பகிரங்கமாக ஈடுபட்டிருந்தனர். ஆனால் இவர்களைக் கைது செய்து குற்றச்சாட்டுக்கள் சுமத்தாமலும் விசாரணையில்லாமலும் நீண்டகாலத்துக்குச் சிறைவைத்திருந்ததன் விளைவு தீவிரவாத இளந்தலைமை உருவானதுதான்!

### இன்றைய அரசும் நிறைவேற்றவில்லை

இன்றைய அரசாங்கம் 1977-ம் ஆண்டில் மிகப்பெரிய தேர்தல் வெற்றிக்குப்பின் ஆட்சிபீடத்துக்கு வந்தபோது இன ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு அதற்கு அதிசயிக்கத் தக்கவாய்ப்புஇருந்தது.

தேர்தலைத் தொடர்ந்து தோன்றிய கலவரம் இரண்டு சமூகங்களுக்கிடையிலும் கசப்பை ஏற்படுத்தியபோதிலும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கிடையில் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்தன பின்னர் இப்பேச்சுவார்த்தைகள் முறிந்தன எனினும் தமிழ் ஒரு ''தேசிய மொழி'' எனப் பிரகடனப்படுத்தும் ஷரத்தும் இன, மத, சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டுவதைத் தடைசெய்யும் ஷரத்தும் போன்ற ஷரத்துக்கள் 1978ம் வருடத்திய புதிய அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட்ட போதிலும் தமிழ் மக்களில் பெரும்பாலோர் அதிருப்தியையே காட்டினர்.

1977ம் ஆண்டுத் தேர்தல் பிரசாரத்தின்போது சிறுபான்மையினர் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு வட்டமேசை மகாநாடொன்றைக் கூட்டவிருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி உறுதியளித்திருந்தது. இப்படி உறுதியளிக்கப்பட்டதே சிறுபான்மையினருக்குப் பிரச்னைகள் இருப்பதை ஏற்றுக்கொண்டதாகும். ஆனாலும் அந்த உறுதிமொழி இன்னமும் நிறைவேற்றப்படவில்லை,

### இடைவெளி விரிகின்றது

''நான் ஐக்கியஇலங்கையில் நம்பிக்கைகொண்டவன். கடந்த முப்பதாண்டுக்கு மேலாக நாட்டின் அரசியல் நிலையை அவதானித்துவருபவன்'' என்று கூறும் திரு. காமினி சிங்களவர்களும் தமிழர்களும் துரிதமாகத் தூரவிலகிச்சென்றுகொண்டிருக்கிறார்கள், இது மிகவும் ஆபத்தானது. காலம்கடந்துபோகுமுன் ஐக்கியஇலங்கையில் நம்பிக்கையுள்ளவர்கள் அனைவரும் இந்நிலையைத் தடுப்பதற்கு தமது சக்தி அனைத்தையும் உபயோகிக்கவேண்டியது அவசியம்,

''இலங்கைக்கும் வெளிநாடுகளுக்குமிடையில் நட்புறவை ஏற்படுத்துவதற்கு பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் இங்கு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சௌஜன்யத்தையும் ஏற்படுத்துவதற்கு தன்னை முழுதாக அர்ப்பணித்துள்ள ஒரு சங்கமாவது இருப்பதாக எனக்குத் தெரிந்தவரையில் இல்லை. பொதுமேடைகளில் நின்று தேசியஐக்கியம்பற்றிப் பேசுவது நடைமுறையில் அதிகம் உதவமாட்டாது.

''நெருக்கடி நிறைந்துள்ள இன்றைய சூழ்நிலையில் சகல தரப்பையும் சேர்ந்த அரசியல் வாதிகள் நாட்டுக்குச்செய்யக் கூடிய நன்மை, வாயை மூடிக் கொண்டிருப்பதுதான்.

''இன்று மிகமிகத் தேவையாக இருப்பது நிதானமான சிந்தனையும் நிதானமான செயலுந்தான்!' என்று சொல்கிறார்.

---

வட அயர்லாந்தில்

## உண்ணாவிரதமிருந்த 8வது கைதியும் மரணம்

பெல்பாஸ்ட், ஆக.3

வடஅயர்லாந்தில் உண்ணாவிரதமிருந்து வந்த எட்டாவது ஐரிஷ் கெரில்லா கைதியும் மேஸ் சிறைச்சாலையில் இன்று மரணமானார். 73 தினங்கள் இவர் உண்ணாவிரதமிருந்தார்.

இவரது மரணத்தைத் தொடர்ந்து பெல்பாஸ்டில் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

ஐரிஷ் கெரில்லாக் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெறுமென ஐரிஷ் குடியரசு இராணுவம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட இக் கைதியின் மரணத்தையடுத்து ஐரிஷ் கிளர்ச்சியாளர்கள் வன்முறையில் இறங்கியுள்ளனர்.

கெவின் லின்ஞ் [24-வயது] என்ற ஏழாவது கெரில்லாக் கைதி சிறையில் உண்ணாவிரதமிருந்து நேற்று முன்தினம் மரணமானது தெரிந்ததே.

[வெ]

---

## மோசடி!

[சுழிபுரம்]

பட்டப்பகலில் மோசடி ஒன்று அம்பலமானது. பலர் முன்னிலையில் இம் மோசடி அம்பலமாகவே, சம்பந்தப்பட்ட நபர் ஓடிமறைந்தாராம். இச்சம்பவம் சுழிபுரத்தில் இடம்பெற்றது.

சுழிபுரம் கிழக்கு மாணிக்கம் வைரவகோவிலடியில் வடலியடைப்பு சிகரட் புகையிலை உற்பத்திச்சங்கத்தினர் அப்பகுதிக் கமக்காரர்களிடமிருந்து சிகரட்புகையிலையைக் கொள்வனவுசெய்தனர். புகையிலை சாக்கில் சுருளாகக் கட்டப்பட்டுத் தராசில் நிறுக்கப்பட்டது. ஒருவருடைய சுருள் அதிக பாரமாக இருப்பதுசந்தேகத்தைக் கொடுத்ததால், அப்பொதியினைப் பலரது முன்னிலையில் அவிழ்த்துப்பார்த்தபோது முப்பது கிலோ நிறையுள்ள கல் ஒன்று இருப்பது காணப்பட்டது. அதேபோல் மேலும் மூன்று கற்கள் வேறு சுருள்மூடைகளில் இருந்தன. சம்பந்தப்பட்ட நபர் அவ்விடத்தை விட்டு ஓடிமறைந்துவிட்டாராம். இவர் ஒரு முன்னாள் அரசஊழியர் என்று தெரியவந்தது.

[அ]

---

## முக்கிய புகார்கள் மீதே உடன் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதுள்ள பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களால் செய்யப்படும் புகார்கள் பதிவு செய்யப்படும் என்றும், ஆனால் சாதாரண புகார்கள் தவிர்ந்த கொலை, கொள்ளை போன்ற பாரதூரமான புகார்கள் தொடர்பாகவே உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் 6 பொலிஸ் நிலையங்கள் மூடப்பட்டு அவற்றின் கடமைகள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு மாற்றப்பட்டமை தெரிந்ததே.

[க-அ]

---

## அம்பாறையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளை அடுத்து சில சம்பவங்கள் இடம்பெற்றதாகவும்அதனைத்தொடர்ந்துநேற்று நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களின் போது பலர் காயமடைந்ததாகவும் பஸ்கள், கார்கள் பலசேதப்படுத்தப்பட்டதாகவும் தெரிகிறது.

அம்பாறையில் கலவரம் நடைபெற்ற இடங்களில் கடமையில் ஈடுபட இராணுவமும் அழைக்கப்பட்டுள்ளது.

அம்பாறையிலுள்ள தமிழ் மக்கள் மட்டக்களப்பை நோக்கிச் செல்கின்றனர்என்று தெரியவந்துள்ளது.

[ம-இ]

---

## பொலிசார்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இடைப்பட்ட 6 மணி நேரமும் ஒவ்வொரு கடையிலும் தினமும் 2 சாரணர் கடமையாற்றுவார்கள்.

கோவில் வெளிப்பகுதியில் சென் ஜோன்ஸ் அம்புலன்சைச் சேர்ந்த 50 தொண்டர்கள் தினமும் கடமையாற்றுவார்கள். அத்துடன் தினமும் 20 சாரணர்கள் கோவில் வீதியில் கடமையாற்றுவார்கள்.

தினமும் கோவில் திருவிழா இரவு 7-15 மணிக்கு முடிவடைந்துவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டது

[க-அ]

---

## சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக திரு. அருணாசலம் மகாதேவா பதவியேற்றுள்ளார். இலங்கை நிர்வாகச்சேவையைச் சேர்ந்த இவர் முன்னர் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்திப்பகுதி உதவிக் கூட்டுறவு ஆணையாளராகக் கடமையாற்றிவந்தார். யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவரான திரு. மகாதேவா 1945-ம் ஆண்டு தொடக்கம் அரசாங்க சேவையில கடமையாற்றுகிறார்.

---

## றேகண விஜயவீரா யாழ். வருகிறார்

[கிளிநொச்சி]

மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் திரு. றேகன் விஜயவீரா இம்மாதம் 9-ந் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில 10 கூட்டங்களில உரை நிகழ்த்துவார்.

அன்றைய தினம் இரவு சுன்னாகத்தில நடைபெறும் பொதுக்கூட்டத்தில திரு. றேகன் விஜயவீரா உரை நிகழ்த்துவார்.

அன்று காலை 9 மணிக்கு முருகண்டிக்கு வரும் திரு. விஜயவீராவுக்கு அங்கு வரவேற்பு அளிக்கப்படும். இதைத் தொடர்ந்து காலையில ஸ்கந்தபுரம், இரணைமடுச் சந்தி, வதிரைவேங்கை கோவிலடி, பஸ் டிப்போ சந்தி ஆகிய இடங்களில வரவேற்பு அளிக்கப்படும்.

[கொ]

---

## 'ஈரானுக்கு வருக' பானிசதாருக்கு கொமெய்னி அழைப்பு

தெஹ்ரான், ஆகஸ்ட் 8

பாரிசில் அரசியல் தஞ்சம் அடைந்துள்ள ஈரானிய முன்னாள் ஜனாதிபதி பானிசதாரை மக்களுக்குச் சேவையயற்ற நாடு திரும்புமாறு ஈரானின் மதத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னி அழைப்புவிடுத்துள்ளார்.

ஈரானின் புதிய ஜனாதிபதியாக முகமது அலிரஜாய் இன்று பதவிப்பிரமாணம் செய்து கொண்டதையடுத்து, அயத்தொல்லா கொமெய்னியினால் வெளியிடப்பட்ட செய்தி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அதேவேளை ஈரானிய அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான அறிக்கைகளை வெளியிடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு பானிசதாரை பிரான்ஸ் அரசாங்கம் கேட்டுள்ளது.

ஈரானிய அரசாங்கத்தைக் கவிழ்க்கப்போவதாக பானிசதார் பிரான்ஸ் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்திருந்தமை தெரிந்ததே.

[வெ]

---

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லநாயகி வேலுப்பிள்ளை

பன்னாலையைச் சேர்ந்த திருமதி செல்லநாயகி வேலுப்பிள்ளை காலமானார். இவர் மலேசியன் பென்சனியர் திரு. க. வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், கட்டிடத் திணைக்கள யாழ்ப்பாண மாவட்டப் பொறியியலாளர் நந்திஸ்வரன், யாழ்ப்பாணம் சன்மார்க்க மகாவித்தியாலய ஆசிரியை திருமதி சிவஞானமலர் விஸ்வநாதன், செல்வி பாக்கியலீலாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. செ. விஸ்வநாதன், திருமதி ஜெகதட்சணி நந்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், பிரணவன், சித்தகன், மைதிலி, மீரா ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளின் பின் இன்று [4-8-81] செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு கீரிமலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

0511

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறைவீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஓகஸ்ட் 4ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது Registered as a NewsPaper, at the General Post office; Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49, Jaffna. தொலைபேசி; 7707, 389, 8126.